தி.மு.க. முப்பெரும் விழாவினையொட்டி கலைஞர் விருதுக்கு இந்த ஆண்டு தேர்வு செய்யப்பட்டுள்ள தி.மு.க. பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. இன்று தி.மு.க. தலைவர் முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் வாழ்த்து பெற்றார். அருகில் துணைப் பொது செயலாளர் அமைச்சர் பொன்முடி, தி.மு.க. தலைமை நிலைய செயலாளர் பூச்சி எஸ்.முருகன் உடன் உள்ளனர்.

15-ந்தேதி முப்பெரும் விழா

டி.ஆர்.பாலு எம்.பி.க்கு கலைஞர் விருது

தி.மு.க. தலைமைக்கழகம் அறிவிப்பு

சென்னை, செப்.2– அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15–ந்தேதி ஆண்டு தோறும் தி.மு.க. சார்பில் முப்பெரும் விழா நடத்தப்படும். இதையொட்டி பல்வேறு விருதுகள் அறிவிக்கப்படும்.

இந்த ஆண்டில் விருது பெறுவோர் பட்டியலை தி.மு.க. தலைமைக்கழகம் இன்று வெளியிட்டது.

கலைஞர் விருது

தி.மு.க. பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி.க்கு கலைஞர் விருது வழங்கப் படுகிறது. சம்பூர்ணம் சாமிநாதன் பெரியார் விருது பெறுகிறார். கோவை இரா. மோகனுக்கு அண்ணா விருது வழங்கப்படும்.

புதுவை சி.பி.திருநாவுக்கரசுக்கு பாவேந்தர் விருதும், குன்னூர் சீனிவாசனுக்கு பேராசிரியர் விருதும் அறிவிக்கப்பட்டு உள்ளன.

இந்த விருதுகள் 15–ந் தேதி விருதுநகரில் நடை பெறும் தி.மு.க. முப்பெரும் விழாவில் வழங்கப்படும்.

பாப்பிரெட்டிப்பட்டியில்

விநாயகர் சதுர்த்தி விழாவில் ஊர்வலமாக செல்ல முயன்ற பா.ஜ.க. நிர்வாகியை தடுத்து நிறுத்திய போலீசாரால் பரபரப்பு

தருமபுரி,செப்.2 – நாடு முழுவதும் விநாயகர் சதுர்த்தி விழா நேற்று முன் தினம் முதல் கோலாகலமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டியில் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு பாப்பிரெட்டிப்பட்டி பா.ஜ.க. கட்சியின் சார்பில் விநாயகர் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டு பூஜைகள் நடைபெற்றன.

அதனை தொடர்ந்து நேற்று மாலை பா.ஜ.க. சார்பில் சிறுபான்மை அணியின் தேசிய செயலாளர் வேலூர் இப்ராஹிம் தலைமையில் விநாயகர் சிலையை வாணியாறு அணையில் கொண்டு சென்று கரைக்க பாப்பிரெட்டிப்பட்டி தீயணைப்பு நிலையத்தின் அருகே இருந்து பா.ஜ.க.வினர் ஊர்வலமாக சென்றனர்.

அப்போது 100 மீட்டர் தாண்டி ஊர்வலமாக செல்ல கூடாது என தெரிவித்து வேலூர் இப்ராஹிம் மற்றும் பா.ஜ.வினரை காவல்துறையினர் தடுத்து நிறுத்தியதில் இருதரப்பினருக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டதால் அதிவிரைவு படை காவல்துறையினர் மற்றும் காவல்துறையினர் என 100–க்கும் மேற்பட்டோர் வரவழைக்கப்பட்டதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது

இருப்பினும் காவல்துறையினரின் கட்டுப்பாடுகளையும் மீறி பா.ஜ.க.வினர் ஊர்வலமாக 500 மீட்டர் வரை விநாயகர் சிலையை எடுத்து சென்று வாணியானு அணையில் சிலையை கரைத்தனர்.

ஊட்டச்சத்து மாத திருவிழாவை முன்னிட்டு

தருமபுரி கலெக்டர் தலைமையில் உறுதிமொழி ஏற்பு

தருமபுரி,செப்.2 – தருமபுரி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் இன்று சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் சார்பில் ஊட்டச்சத்து மாத விழாவிற்காக உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடந்தது.

ஊராட்சிகளில் ஊட்டச்சத்தை மேம்படுத்துதல் என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு நடைபெற உள்ள தேசிய ஊட்டச்சத்து மாத திருவிழா 2022–வை (செப்டம்பர் 1 முதல் 30 வரை) முன்னிட்டு மாவட்ட கலெக்டர் சாந்தி தலைமையில் உறுதி மொழி ஏற்பு நிகழ்ச்சி நடந்தது.

மேலும் இது தொடர்பான விழிப்புணர்வு கையெழுத்து இயக்கம் மற்றும் விழிப்புணர்வு பேரணியும் நடைபெற்றது.

அடிப்படை வசதிகள் கேட்டு மாணவிகளின் பெற்றோர்கள் இலக்கியம்பட்டி மகளிர் உயர்நிலைப் பள்ளியில் தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர். அதனை படத்தில் காணலாம்.

இலக்கியம்பட்டி அரசு பெண்கள் பள்ளி முன்பு

பள்ளி மேலாண்மை குழுவின் தலைமையில் மாணவிகளின் பெற்றோர்கள் போராட்டம்

அடிப்படை வசதிகள் இல்லை என்று புகார்

தருமபுரி, செப்.2– தருமபுரியை அடுத்துள்ள இலக்கியம்பட்டியில் அரசு பெண்கள் உயர்நிலை பள்ளி உள்ளது. இங்கு சுமார் 385 மாணவிகள் படித்து வருகின்றனர்.

இன்று காலை பள்ளி முன்பு பள்ளி மேலாண்மை குழுவினர் தலைமையில் சுமார் 50–க்கும் மேற்பட்ட மாணவிகளின் பெற்றோர்கள் திடீர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பள்ளி மேலாண்மை குழு தலைவர் கிருஷ்ணம்மாள் தலைமையில் நடந்த இந்த போராட்டத்தில் மாணவிகளுக்கு கழிவறை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் இல்லை. சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் எந்திரம் பராமரிப்பின்றி உள்ளது. கூடுதல் வகுப்பு கட்டிடம் கட்டப்பட்டும் திறக்கப்படாமல் உள்ளது.

தலைமை ஆசிரியை உள்பட 19 பேர் பணிபுரிந்து வருகிறார்கள். அவர்களில் 7 ஆசிரியர்கள் தொடர்ந்து மருத்துவ விடுப்பில் உள்ளதால் கல்வி கற்பித்தல் பாதிக்கப்படுகிறது என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை குறித்து பேசினர்.

இதையடுத்து அங்கு விரைந்து சென்ற தருமபுரி டவுன் போலீஸ் இன்ஸ்பெக்டர் நவாஸ், சப்–இன்ஸ்பெக்டர் சுந்தரமூர்த்தி ஆகியோர் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இதையடுத்து போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அங்கிருந்து கிளம்பி சென்று கலெக்டர் அலுவலகத்தில் தங்களது கோரிக்கை மனுவை கொடுத்தனர்.

அரூர் பெரிய ஏரியில்

பேரிடர் மீட்பு குறித்த ஒத்திகை பயிற்சி

அரூர், செப். 2– அரூரில் பேரிடர் மீட்பு குறித்த ஒத்திகை பயிற்சி நடைபெற்றது. தருமபுரி மாவட்ட பேரிடர் மேலாண்மை அலுவலகம் சார்பில் நடைபெற்ற இந்த பயிற்சியை அரூர் கோட்டாட்சியர் விஸ்வநாதன் தொடங்கி வைத்தார்.

தருமபுரி மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பெய்த வரும் மழையினால் நீர்த்தேக்கங்கள், தடுப்பணைகள், ஏரிகள், குளம் குட்டைகள் உள்ளிட்ட நீர்நிலைகள் நிரம்பியுள்ளன.

மேலும் ஓரிரு மாதங்களில் தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவ மழையினால் ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் நிலையுள்ளது. இந்த நிலையில், பருவ மழைக்காலங்களில் ஏற்படும் பேரிடர் பாதிப்புகளில் இருந்து பொதுமக்களை காப்பாற்றுதல், முன்னெச்சரிக்கை பாதுகாப்பு தடுப்பு நடவடிக்கைகள் குறித்த ஒத்திகை நிகழ்ச்சிகளை அரூர் பெரிய ஏரியில் பேரிடர் மீட்புக் குழுவினர் மேற்கொண்டனர்.

இதில் வட்டாட்சியர் கனிமொழி, தீயணைப்புத்துறை நிலைய அலுவலர் ரகுபதி, தன்னார்வலர்கள், பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

டெல்லி, தமிழக நிர்வாகிகள் 400 பேருடன்

ராகுல்காந்தி தினமும் 7 மணி நேரம் பாத யாத்திரை

நாகர்கோவில், செப்.2– கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை ராகுல் காந்தி 3750 கிலோ மீட்டர் தூரம் பாதயாத்திரை மேற்கொள்கிறார்.

பாத யாத்திரை தொடக்கம்

கன்னியாகுமரியில் பாதயாத்திரை தொடங்கும் ராகுல் காந்தி 12 மாநிலங்கள் வழியாக காஷ்மீர் சென்றடைகிறார். கன்னியாகுமரியில் 7–ந்தேதி தொடங்க இருக்கும் பாத யாத்திரையில் கலந்து கொள்வதற்காக ராகுல் காந்தி டெல்லியில் இருந்து விமானம் மூலமாக 7–ந் தேதி காலை சென்னை வருகிறார்.காலை 11 மணிக்கு ஸ்ரீபெரும்புதூரில் உள்ள அவரது தந்தை ராஜீவ் காந்தி நினைவிடத்தில் மலர் அஞ்சலி செலுத்துகிறார்.

பின்னர் அங்கிருந்து ஹெலிகாப்டர் மூலமாக ராகுல் காந்தி மதியம் 2 மணிக்கு கன்னியாகுமரிக்கு வருகிறார். அவருடன் 2 மாநில முதல்– அமைச்சர்களும் வருகிறார்கள்.கன்னியாகுமரி விருந்தினர் மாளிகையில் ராகுல் காந்தி ஹெலிகாப்டர் தரை இறங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

மு.க.ஸ்டாலின் பங்கேற்பு

அங்கிருந்து விவேகானந்தர் மண்டபம், திருவள்ளுவர் சிலையை தனிப்படகில் சென்று ராகுல் காந்தி பார்வையிடுகிறார். பின்னர் காந்தி மண்டபத்தை ராகுல் காந்தி பார்வையிடுகிறார். இதைத் தொடர்ந்து அங்கு நடைபெறும் பாதயாத்திரையை முதல்–அமைச்சர் மு.க. ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார். பின்னர் காமராஜர் மண்டபத்திற்கு செல்லும் ராகுல் காந்தி அந்த பகுதியில் நடைபெறும் பொதுக் கூட்டத்திலும் பங்கேற்கிறார். மாலை 4 மணிக்கு பொதுக்கூட்டம் தொடங்குகிறது.

இதில் காங்கிரஸ் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் கலந்து கொள்ள உள்ளனர். ராகுல் காந்தி பொதுக்கூட்டத்தில் உரை ஆற்றுகிறார்.

இதை தொடர்ந்து அங்கிருந்து தனது பாத யாத்திரையை தொடங்குகிறார்.

முதல் நாள் 3½ கிலோ மீட்டர் தூரம் அவர் பாத யாத்திரையை மேற்கொள்கிறார். ராகுல் காந்தியுடன் டெல்லி யில் இருந்து 100 நிர்வாகி களும் தமிழகத்தில் இருந்து 300 நிர்வாகி களும் என 400 பேர் பாதயாத்திரை செல்ல உள்ளனர். இவர்கள் தினமும் ராகுல் காந்தி பாதயாத்திரை நிகழ்ச்சியில் பங்கு கொள்வார்கள். இது தவிர அந்தந்த மாவட்ட நிர்வாகிகள் பாதயாத்திரையில் கலந்து கொள்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளது.

அடையாள அட்டை

பாத யாத்திரையில் கலந்து கொள்பவர்களுக்கு தனி அடையாள அட்டை வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. முதல் நாள் பாத யாத்திரையை அகஸ்தீஸ்வரம் விவேகானந்தா கல்லூரியில் ராகுல் காந்தி நிறைவு செய்கிறார். அன்று இரவு அங்கு தங்குகிறார். தினமும் காலை 4 மணி நேரமும், மாலை 3 மணி நேரம் என 7 மணி நேரம் பாத யாத்திரை செய்ய ராகுல் காந்தி திட்டமிட்டு உள்ளார்.

8–ந்தேதி காலை 7 மணிக்கு அகஸ்தீஸ்வரம் விவேகானந்தா கல்லூரியில் இருந்து தனது பாத யாத்தி ரையை தொடங்குகிறார். வடுகன் பற்று, கொட்டாரம், பொற்றையடி, வழுக்கம்பாறை வழியாக சுசீந்திரம் பகுதியில் மதியம் 11 மணிக்கு தனது பாத யாத்திரையை நிறைவு செய்கிறார்.

மாலை 4 மணிக்கு சுசீந்திரத்தில் இருந்து புறப்பட்டு கோட்டார், சவேரியார் ஆலய சந்திப்பு, செட்டிகுளம், கலெக்டர் அலுவலக சந்திப்பு வழியாக இரவு 7 மணிக்கு டெரிக் சந்திப்பில் பாதயாத்திரை நிறைவு செய்கிறார். இரவு நாகர்கோவில் ஸ்காட் கிறிஸ்தவ கல்லூரியில் ராகுல் காந்தி தங்குகிறார்.

மறுநாள் 9–ந்தேதி காலை 7 மணிக்கு ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரியில் இருந்து புறப்பட்டு பார்வதிபுரம். சுங்கான் கடை, வில்லுக்குறி வழியாக புலியூர்குறிச்சியில் மதியம் 11 மணிக்கு பாத யாத்திரை நிறைவு செய்யும் அவர் மாலை 4 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு தக்கலை, மேட்டுக்கடை, மணலி சந்திப்பு, அழகிய மண்டபம் வழியாக முளகு மூட்டில் இரவு 7 மணிக்கு பாத யாத்திரையை நிறைவு செய்கிறார்.

9–ந்தேதி காலை 7 மணிக்கு முளகுமூடு பகுதியில் இருந்து பாத யாத்திரையை தொடங்கும் ராகுல் காந்தி சாமியார் மடம், இரவிபுதூர் கடை வழியாக சிராயன்குழி செல்கிறார். அங்கு காங்கிரஸ் கொடி கம்பத்தில் கொடி யேற்றி வைக்கிறார். பின்னர் சாங்கை வழியாக மார்த்தா ண்டம் செல்கிறார். அங்கு மதியம் சிறிது நேரம் ஓய்வெடுத்துவிட்டு பின்னர் மாலை 4 மணிக்கு குழித்துறை, படந்தாலுமூடு, களியக்காவிளை, கோழி விளை வழியாக செறுவார கோணம் செல்கிறார். அங்கு இரவு தங்குகிறார்.

கலந்துரையாடல் ஏற்பாடு

10–ந்தேதி காலை செறுவாரகோணத்தில் இருந்து புறப்பட்டு கேரளா மாநிலம் செல்கிறார். ராகுல் காந்தி பாதயாத்திரை மேற்கொள்ளும் நேரங்களில் மக்களுடன் கலந்துரையாடவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

கலை நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடுகள் செய்து வருகிறார்கள். இளைஞர் காங்கிரசார், மாணவர் காங்கிரஸ் சார்பில் பல்வேறு சிறப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகிறது. குமரி மாவட்டத்தில் இருந்து சுமார் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இந்த நிகழ்ச்சியில் பங்கு ஏற்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

மேலும் வெளி மாவட்டங்க ளில் இருந்தும் நிர்வாகிகள் பலரும் இந்த பாதயாத்திரை நிகழ்ச்சியில் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்க ப்படுகிறது. இதனால் பாதுகாப்பு ஏற்பாடுகளும் பலப்படுத்தப் படுகிறது.

தருமபுரியில் தேவார இன்னிசை-அருளாசி நிகழ்ச்சி

தருமபுரி.செப்.2– தருமபுரி அப்பர் கைலாய கட்சிக்குழு சார்பில் வரும் 4–ந்தேதி தேவார இன்னிசை மற்றும் அருளாசி நிகழ்ச்சி நல்லம்பள்ளி அதியமான் கோட்டை பைபாஸில் உள்ள ஸ்ரீ சாய் திருமண மண்டபத்தில் நடக்கிறது. ஈரோட்டை சேர்ந்த சிவாக்கர தேசிக ஸ்வாமிகள் ஞானம் அனந்த எம்பிரான் சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் அருளிய இன்னிசை மற்றும் அருளாசியை வழங்குகிறார். நிகழ்ச்சி ஏற்பாடுகளை விழாக்குழு தலைவர் சூடாமணி தலைமையில் செய்து வருகின்றனர்.

தருமபுரி எல்.ஐ.சி. அலுவலகம் அருகில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி முகவர்கள் போராட்டத்தில் ஈடுபட்ட போது எடுத்த படம்.

ஆவணம் காணவில்லை

நான் கீழ்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். எனது பெயரில் உள்ள ஆவண எண். 85/91 கொண்ட நிலப்பத்திரம் கந்திகுப்பம் பேருந்து நிலையம் அருகே 20.08.2022 அன்று தொலைந்துவிட்டது. இது தொடர்பாக 26.08.2022 அன்று காவல்துறையில் ஆன்லைன் புகார் செய்யப்பட்டுள்ளது. புகார் எண் Ref. No: CRJ22153291. மேற்கண்ட பத்திரத்தை கண்டெடுத்தவர்கள் கீழ்கண்ட முகவரிக்கு தகவல் தெரிவிக்கவும்.

முகவரி: **J.பெர்னத்மேரி**
க.எண். 3/272, கந்திகுப்பம் (Vill. & Post), கிருஷ்ணகிரி மாவட்டம்.
செல்: 9600773636, 9944630565

ENROLLMENT NOTICE

After ten days of the publication of this notice and within three months thereafter, **I, Subhalakshmi Gantayat B.A.LL.B., D/O Suryanarayan Gantayat** aged 23 years, permanently residing at 35-B,Basheer Mohammad layout, Gandhinagar , Krishnagiri Taluk and District - 635 001 intend having my enrollment as an advocate moved before the Bar Council of Tamilnadu, Bar Council Buildings High Court Campus, Chennai-600104. Those who have any valid objections may notify the same to the Bar council within 10 days.

SUBHALAKSHMI GANTAYAT.

ஆவணம் காணவில்லை

நான் கீழ்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். எனது பெயரில் உள்ள ஆவண எண். 1065/1979, நிலப்பத்திரம் தின்னூர் கிராமம் அருகே ஜெராக்ஸ் எடுக்க சென்றபோது 24.08.2022 அன்று தொலைந்துவிட்டது. இது தொடர்பாக 01.09.2022 அன்று காவல்துறையில் ஆன்லைன் புகார் செய்யப்பட்டுள்ளது. புகார் எண் LDR No: ID587202200332. மேற்கண்ட பத்திரத்தை கண்டெடுத்தவர்கள் கீழ்கண்ட முகவரிக்கு தகவல் தெரிவிக்கவும்.

முகவரி : **வீரம்மாள்**
சிக்கனம்பட்டி கிராமம்,
Bஅக்கரஹாரம் அஞ்சல்,நல்லம்பள்ளி வட்டம்,
தருமபுரி மாவட்டம்–636813.
செல்: 97878 15597

ஆவணம் காணவில்லை

S.தனஞ்செயன், த/பெ. C.சரவணன், 5/16, பிள்ளையார் கோயில் தெரு, அளேதர்மபுரி என்ற முகவரியை சேர்ந்த என்னுடைய பத்திரம் 2370/2017, சர்வே எண்: 88/5A தருமபுரி சார்பதிவாளர்–2 அலுவலகத்தில் பதிவான பத்திரம் மற்றும் திருவள்ளுவர் மாவட்டம் பள்ளிப்பட்டு சார் பதிவகத்தில் பதிவான ஆவண எண்.1095/2017 கொண்ட பத்திரம் 14.8.2022 அன்று தருமபுரி கலெக்டரேட் முன்புறம் நகல் எடுக்க செல்லும்போது காணாமல் போய்விட்டது. இது தொடர்பாக 30.8.2022 அன்று ஆன்லைன் புகார் கொடுக்கப்பட்டுள்ளது. புகார் எண் LDR No: CRD22156058. பத்திரத்தை யாரேனும் கண்டுபிடித்தால் மேற்கண்ட முகவரிக்கு தெரியப்படுத்தவும்.

——முகவரி——
S.தனஞ்செயன்
அளேதர்மபுரி
செல்: 97906 89363

ENROLLMENT NOTICE

After ten days of the publication of this notice and within three months thereafter, I, **MALAVIKA.M, D/o. MURUGAN.S,** aged about 22 years, permanently residing at M.655, SHA MURUGAN ILLAM, Vijayanagaram, Rayakottai Housing Board, Hosur-635109, intend having my enrollment as an advocate moved before the Bar Council of Tamilnadu, Bar Council Buildings High Court Campus, Chennai-104. Those who have any valid objections may notify the same to the Bar council within 10 days.

MALAVIKA.M

வட்ட நிர்வாகம் நடுவர் மற்றும் வட்டாட்சியர், ஆளகிரி
மே.எ,அ.தி.மு. 122/2022
நாள்: 1.07.2022

திரு.ராமசந்திரன், த/பெ.முனிசந்திரப்பா 4/746 நரசிபுரம் கிராமம் அத்திமுகம் அஞ்சல், ஆளகிரி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் –மனுதாரர்
–எதிராக–
வருவாய் ஆய்வாளர் பேரிகை
... எதிர்மனுதாரர்

பொது அறிவிப்பு

மனுதாரர் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறார். மேற்படி மனுதாரர் திரு.ராமசந்திரன் என்பவரின் மகன் ராசந்திப் என்பவர் கடந்த 11.04.2007–ம் தேதியில், நரசிபுரம கிராமத்தில் பிறந்தார். பிறப்பை பதிவு செய்ய தவறிட்டதால் அத்திமுகம வருவாய் கோட்டாட்சியர் முன்னிலையில் மேற்படி பிறப்பை பதித்து உத்தரவிடக்கோரி விண்ணப்பித்துள்ளார் மனு மீது ஆட்சேபனை இருப்பின் மேற்படி நாளிதழிலில் அறிவிப்பு வெளியான தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் பேரிகை வருவாய் ஆய்வாளர் அலுவலகத்தில் ஆஜராகி ஆட்சேபனை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறினால் மனு ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.

/வட்டாச்சியர் உத்தரவுபடி/
வட்ட நிர்வாகம் நடுவர் மற்றும் வட்டாசியர், ஆளகிரி

கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் சமூகம்
6295/2022

லட்சுமி, க/பெ. அர்ஜுனன், பெரியமோட்டூர், கனகமுட்லு, கிருஷ்ணகிரி.
... மனுதாரர்
/ எதிராக /
வட்டாட்சியர், கிருஷ்ணகிரி.
... எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மனுதாரரின் தந்தை குப்பன் என்பவர் கடந்த 08.07.2001 அன்று மேற்படி முகவரியில் இறந்துவிட்டார். இறப்பை பதிவு செய்யக்கோரி மனுதாரர் தாக்கல் செய்துள்ள மேற்படி மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் சமூகத்திடம் 10 நாட்களுக்குள் தெரிவித்து கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்படும்.

V.PARTHIBAN, B.A., B.L.,
Advocate & Notary Public,
Krishnagiri-635001

கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் சமூகம்
5317/2022

P.ராஜா, த/பெ. பெரியதம்பி, 97, பழைய பேயனப்பள்ளி (V), K.R.P. டேம் (Po.), கிருஷ்ணகிரி.
... மனுதாரர்
/ எதிராக /
வட்டாட்சியர், கிருஷ்ணகிரி.
... எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மனுதாரரின் தாய் ருக்கம்மாள் என்பவர் கடந்த 23.02.2006 அன்று மேற்படி முகவரியில் இறந்துவிட்டார். இறப்பை பதிவு செய்யக்கோரி மனுதாரர் தாக்கல் செய்துள்ள மேற்படி மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் சமூகத்திடம் 10 நாட்களுக்குள் தெரிவித்து கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்படும்.

V.PARTHIBAN, B.A., B.L.,
Advocate & Notary Public,
Krishnagiri-635001

கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் சமூகம்
2008/2022

அப்சாபானு, க/பெ. ஜாவித், சோமநாதபுரம், குருபரபள்ளி, கிருஷ்ணகிரி.
... மனுதாரர்
/ எதிராக /
வட்டாட்சியர், கிருஷ்ணகிரி.
... எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மனுதாரரின் தாய் ரெஜியா பானு என்பவர் கடந்த 09.09.1984 அன்று மேற்படி முகவரியில் இறந்துவிட்டார். இறப்பை பதிவு செய்யக்கோரி மனுதாரர் தாக்கல் செய்துள்ள மேற்படி மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் சமூகத்திடம் 10 நாட்களுக்குள் தெரிவித்து கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்படும்.

V.PARTHIBAN, B.A., B.L.,
Advocate & Notary Public,
Krishnagiri-635001

கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் சமூகம்
6354/2022

வசந்தா, க/பெ. கோவிந்தசாமி, நாய்க்கனூர், அஞ்சூர், பர்கூர், கிருஷ்ணகிரி.
... மனுதாரர்
/ எதிராக /
வட்டாட்சியர், பர்கூர்.
... எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மனுதாரரின் மாமியார் பெருமக்காள் என்பவர் கடந்த 02.06.2015 அன்று மேற்படி முகவரியில் இறந்துவிட்டார். இறப்பை பதிவு செய்யக்கோரி மனுதாரர் தாக்கல் செய்துள்ள மேற்படி மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் சமூகத்திடம் 10 நாட்களுக்குள் தெரிவித்து கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்படும்.

V.PARTHIBAN, B.A., B.L.,
Advocate & Notary Public,
Krishnagiri-635001

கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் சமூகம்
5864/2022

முனியப்பன், த/பெ. உலாத்தி (எ) செல்லன், 3/133, அம்பேத்கார், சௌட்அள்ளி, மலையாண்டஅள்ளி, கிருஷ்ணகிரி.
... மனுதாரர்
/ எதிராக /
வட்டாட்சியர், கிருஷ்ணகிரி.
... எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மனுதாரரின் தந்தை உலாத்தி (எ) செல்லன் என்பவர் கடந்த 28.10.2000 அன்று மேற்படி முகவரியில் இறந்துவிட்டார். இறப்பை பதிவு செய்யக்கோரி மனுதாரர் தாக்கல் செய்துள்ள மேற்படி மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் சமூகத்திடம் 10 நாட்களுக்குள் தெரிவித்து கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்படும்.

V.PARTHIBAN, B.A., B.L.,
Advocate & Notary Public,
Krishnagiri-635001

வருவாய் கோட்ட அலுவலகம், கிருஷ்ணகிரி
மே.எ.அ.தி.மு. 5902/2022
நாள்: 18.08.2022

நாகம்மாள், த/பெ. முனிசாமி, 115, பெத்தனப்பள்ளி கிராமம், பெரியகோட்டப்பள்ளி தரப்பு, கிருஷ்ணகிரி வட்டம் மற்றும் மாவட்டம்.
... மனுதாரர்
இடையே
வட்டாட்சியர் அவர்கள், கிருஷ்ணகிரி.
... எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மனுதாரர் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறார். மேற்படி மனுதாரர் நாகம்மாள் தனது தந்தை முனிசாமி என்பவர் கடந்த 30.12.1978 அன்று இறந்து விட்டார். மேற்படியார் இறப்புத் தேதியில் யாருக்காவது ஏதாவது ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு வெளியிட்ட 15 நாட்களுக்குள் கிருஷ்ணகிரி வட்டாட்சியர் அவர்களிடம் தங்கள் ஆட்சேபனை தெரிவிக்கலாம். தவறும் பட்சத்தில் தீர்ப்பு ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.

இங்ஙனம்,
வருவாய் கோட்ட அலுவலகம்,
கிருஷ்ணகிரி.

கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் சமூகம்
6296/2022

முனியம்மாள், க/பெ. சென்றாயன், 2/93, மாணிக்கம் கொட்டாய், தேவசமுத்திரம், கிருஷ்ணகிரி.
... மனுதாரர்
/ எதிராக /
வட்டாட்சியர், கிருஷ்ணகிரி.
... எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மனுதாரரின் தந்தை கூடுகான் என்பவர் கடந்த 10.10.2005 அன்று மேற்படி முகவரியில் இறந்துவிட்டார். இறப்பை பதிவு செய்யக்கோரி மனுதாரர் தாக்கல் செய்துள்ள மேற்படி மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் சமூகத்திடம் 10 நாட்களுக்குள் தெரிவித்து கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்படும்.

V.PARTHIBAN, B.A., B.L.,
Advocate & Notary Public,
Krishnagiri-635001

தனேஜா ஏரோஸ்பேஸ் மற்றும் ஏவியேஷன் லிமிடெட்
Regd. Office: ஆக்ப்: பெலகொண்டப்பள்ளி கிராமம். தளி சாலை, தேன்கனிக்கோட்டை தாலுக்கா, கிருஷ்ணகிரி மாவட்டம். பெலகொண்டபள்ளி-635114 (TN)
தொலைபேசி/ தொலைநகல்: 04347-233508/ 233414
மின்னஞ்சல்: secretarial@taal.co.in **இணையதளம்:** www.taal.co.in
CIN: L62200TZ1988PLC014460

கவனிக்கவும்

தனேஜா ஏரோஸ்பேஸ் அண்ட் ஏவியேஷன் லிமிடெட் (கம்பெனி) இன் 33வது வருடாந்திர பொதுக்கூட்டம் (ஏஜிஎம்) செப்டம்பர் 27, 2022 செவ்வாய்கிழமை மதியம் 12:00 மணிக்கு வீடியோ கான்ஃபரன்ஸ் (விசி) / பிற ஆடியோ விஷுவல் மீன்ஸ் (ஓஏவிஎம்) மூலம் நடைபெறும் என்று இதன்மூலம் அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது.)) நிறுவனங்கள் சட்டம், 2013 மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகள் மற்றும் SEBI (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் விதிமுறைகள்) 2015 இன் பொருந்தக்கூடிய விதிகளுக்கு இணங்க, கார்ப்பரேட் விவகார அமைச்சகத்தின் பொது சுற்றறிக்கை எண்கள். 20/2020, 14/2020, 17/2020, 2/2021, 2/2022 தேதியிட்ட 5 மே, 2020, 8 ஏப்ரல், 2020, 13 ஏப்ரல், 2020, ஜனவரி 13, 2021, மே 05, முறையே 2021, மே 05. 12 மே 2020 தேதியிட்ட SEBI/HO/CFD/CMD1/CIR/P/2020/79 (பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகள்), பொதுவான இடத்தில் உறுப்பினர்கள் இல்லாமல்.

பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகளின்படி நிறுவனம் / டெபாசிட்டரிகளில் மின்னஞ்சல் முகவரிகள் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் மின்னணு முறையில் மட்டுமே அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கை அனுப்பப்படுகிறது. உறுப்பினர்கள் VC/OVAM வசதி மூலம் மட்டுமே AGM இல் சேரலாம் மற்றும் பங்கேற்கலாம்.

ஏ